**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்கு - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் "ஆணைக்குழு" 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , ஒதுக்கீடுகளில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும்

பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்,

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தேறிய செயற்பாட்டு செலவை நோக்கிய செஸ் நிதியில் இருந்தான மாற்றங்கள் கணக்கிற்கு எடுப்பதற்கு முன் ரூபா. 442, 506, 214 பற்றாக்குறையாக விளைந்திருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறையாக ரூபா. 391, 794, 823 அறிக்கையிடப்பட்டது. இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறையானது ரூபா. 51 மில்லியனால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு மூலதன சந்தை அபிவிருத்தி செலவுகள் ரூபா. 13 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் ஊழியர்களின் ஊதியத்திருத்தம் காரணமாக ரூபா. 35 மில்லியனால் ஊழிய செலவுகள் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவின் செஸ் நிதி மற்றும் இழப்பீட்டு நிதியின் பிரதான வருமான விடயங்கள் மற்றும் பிரதான செலவின விடயங்களின் பகுப்பாய்வானது கீழே காட்டப்படுகின்றது.

| | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. | வேறுபாடுகள்<br>சதவீதம் |
|---|---|---|---|
| **செஸ் நிதி மற்றும் இழப்பீட்டு நிதி வருமானங்கள்**<br>------------------------------------------------------------------ | | | |
| பெறப்பட்ட செஸ் | 250,704,350 | 264,026,238 | (5) |
| செஸ் நிதியின் கீழ் முதலீட்டின் மீதான வட்டி | 264,406,422 | 245,603,792 | 7.6 |
| இழப்பீட்டு நிதியின் கீழ் முதலீட்டின் மீதான வட்டி | 39,829,392 | 36,329,850 | 9.6 |

**ஆணைக்குழுவின் செலவினங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் சம்பளங்கள் | 130,974,645 | 108,259,916 | 21.0 |
| EPF மற்றும் ETF | 19,964,301 | 16,636,256 | 20.0 |
| ஊழியர் பணிக்கொடை | 13,045,173 | 3,490,950 | 273.7 |
| விசேட கொடுப்பனவு | 15,882,863 | 11,504,623 | 38.1 |
| எரிபொருள் மீளச்செலுத்துதல் | 416,120 | 2,648,779 | (84.3) |
| ஊழியர் வாகன படி | 19,735,833 | 6,403,984 | 208.2 |
| **மூலதன சந்தை அபிவிருத்தி செலவுகள் - மொத்தம்** | **85,159,152** | **72,065,352** | **18.2** |
| • மூலதன சந்தை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | 48,933,373 | 46,675,368 | 4.8 |
| • பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 20,632,925 | 11,432,025 | 80.5 |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,636,294 | 3,473,587 | 4.7 |
| • சர்வதேச அங்கத்துவ கட்டணங்கள் - IOSCO | 3,529,660 | 2,908,967 | 21.3 |
| • பிரசித்தம் மற்றும் விளம்பரம் | 233,800 | 84,843 | 175.6 |
| • சந்தை கண்காணிப்பு செலவு | 8,167,459 | 7,476,822 | 9.2 |
| • புலனாய்வு மற்றும் பார்வையிடல் செலவு | 25,641 | 13,740 | 86.6 |

அ) 2018 ஜனவரி 22 இல் நடைபெற்ற அதன் 404 வது கூட்டத்தில் சம்பளம் 2018 மார்ச் 01 இலிருந்து அமுலுக்கு வகையில் ஒவ்வொரு வகையான ஊழியர்களுக்கும் சம்பள அளவுத்திட்டத்தினுடைய அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் அதிகரிப்பதற்கு ஆணைக்குழுவினுடைய அங்கத்தவர்களினால் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஊழியர்களின் சம்பளங்கள், EPF மற்றும் ETF மற்றும் விசேட கொடுப்பனவு (ஒரு மாத அடிப்படை சம்பளம் வருடத்திற்கு இரு தடவை) அதிகரிக்கப்பட்டிருந்தது.

ஆ) 2018 ஜனவரி 22 இல் நடைபெற்ற அதன் 404 வது கூட்டத்தில் உதவிப்பணிப்பாளர்கள் மற்றும் மேலான பதவிகளுக்கான வாகன படி ஆணைக்குழுவினுடைய அங்கத்தவர்களினால் திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 01 இலிருந்து அமுலுக்கு வகையில்

முகாமையாளர், சிரேஸ்ர உதவி முகாமையாளர், உதவி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், சிரேஸ்ர நிறைவேற்று செயலாளர் மற்றும் நிறைவேற்று செயலாளர் ஆகிய பதவிகளுக்கும் அது நீட்டிக்கப்பட்டது மற்றும் முகாமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த எரிபொருள் மீளச்செலுத்துதல்கள் ஒழிக்கப்பட்டது. இதன்படி, இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு காலப்பகுதியில் முகாமையாளர்களுக்கான எரிபொருள் மீளச்செலுத்துதல்கள் 84 சதவீதத்தால் குறைவடைந்தபொழுது ஊழியர்களுக்கான வாகன படி 208 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் - 19 இன் பரிந்துரையின் பிரகாரம் ''பணியாளர் நலன்'' முதன் முறையாக 2018 திசெம்பர் 31 இல் பணிக்கொடை பொறுப்பானது தகுதிவாய்ந்த நிபுணர் ஒருவரால் திட்டமிடப்பட்ட அலகு கடன் முறையை பயன்படுத்தி கணிப்பிடப்பட்டது. எனவே மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஊழியர் பணிக்கொடை அதிகரிக்கப்பட்டிருந்தது.

ஈ) மீளாய்வாண்டுக்கான மூலதன சந்தை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி செலவு ரூபா. 48.9 மில்லியன் ஆகும். இதில் ஒழுங்கு முகாமைத்துவ முறைமை (OMS) மற்றும் தரகர் அலுவலக முறைமை (BBO) ஆக செலவு செய்யப்பட்ட ரூபா. 26.8 மில்லியன் தொகை அல்லது 54.8 சதவீதம் பிரதானமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 2017 மற்றும் 2018 இல் நியுயோர்க், நியுசிலாந்து, அவுஸ்ரேலியா, சிங்கப்புர் மற்றும் ஐக்கிய ஐராச்சியத்தில் நடைபெற்ற முதலீட்டாளர் மன்றத்திற்காக ரூபா. 15.7 மில்லியன் தொகை அல்லது 32.1 சதவீதம் ஏற்பட்டது.

உ) 1987 இன் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14B (2) இன் படி மூலதன சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இது அதிகாரமளிக்கப்பட்டள்ளது. இதன்படி, இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் 17 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மூலதன சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் மொத்த செலவின் 18 சதவீதம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அ) | 2018 திசெம்பர் 31 இல் மேற்பார்வை பிரிவின் மேற்பார்வையின் கீழ் 91 நிறுவனங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டில் பிரிவானது 49 நிறுவனங்களுடன் தொடர்புபட்ட தள ஆய்வுகளை நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தியதுடன் மற்றும் மீளாய்வாண்டில் நடத்தப்பட்ட 5 விசேட தள ஆய்வுகளை தவிர்த்து 28 நிறுவனங்களுடன் தொடர்புபட்ட தள ஆய்வுகளையே பூர்த்தி செய்திருந்தது. | மேற்பார்வை பிரிவு தள ஆய்வுகளை நடத்துகையில் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையினை பின்பற்றுகின்றது. 2018 இல் தள ஆய்வுகளை நடத்துகையில் உயர் இடர் கொண்ட நிறுவனங்கள் கவனஞ்செலுத்தப்பட்டது. | அட்டவணைப் படுத்தப்பட்டதன் பிரகாரம் ஆய்வுகளை நடத்துவது அவசியமானது. |
| ஆ) | மீளாய்வாண்டில் புலனாய்வுகள் பிரிவினால் கையாளப்பட்ட 33 வழக்குகளில், 22 ஓகஸ்ட் 2019 இல் 10 வழக்குகளிற்கான புலனாய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கப்பட்ட 4 புலனாய்வுகளின் அறிக்கைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், யூலை 2013 இலிருந்து பெப்ரவரி 2018 வரை பதிவு செய்யப்பட்ட 23 வழக்குகளின புலனாய்வுகள் நடைபெற்று வருகின்றது. | ஒப்புக்கொள்ளப்பட்டது. | நிலுவையிலுள்ள அனைத்து புலனாய்வுகளையும் பூர்த்தி செய்ய முன்னுரிமை அளிக்கவும். |

| | | |
|---|---|---|
| இ) விநியோகம் எதிர் கொடுப்பனவு (DvP) அமுலாக்கத்தை தொடர்ந்து மத்திய எதிர் பொறிமுறை (CCP) இன் அமுலாக்கம் 2018 முதலாம் காலாண்டின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் இது 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கு இது நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், 22 ஓகஸ்ட் 2019 இல் டிவிபி தீர்ப்பனவு மாதிரியின் அமுலாக்கம் முன்னேற்றத்திலேயே உள்ளது. | டிவிபி அமுலாக்கத்திற்கு தேவையான முறைமை மாற்றங்கள் மற்றும் உட்கட்டமைப்பு இற்றைப்படுத்தல்கள் 2019 ஆம் ஆண்டு முடிவில் பூர்த்தியாக்கப்படும் எனவும், அதற்கு ஆறு மாதங்களிற்கு பின்னர் அமுலாக்கம் பூர்த்தி செய்யப்படும் எனவும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை அறிவித்திருந்தது. | டிவிபி அமுலாக்கத்தினை திட்டமிட்டபடி பூர்த்தியாக்குவதுடன் ஒருங்கிணைந்த சிசிபி இனை அமுல்படுத்த இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடலை தொடங்கவும். |

## 3.2 மனித வளங்கள் (எச்ஆர்) முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ) 1987 இன் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 43 (2) இன் படி, ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் தீர்மானிக்கக்கூடிய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய விகிதங்களில் ஊதியம் பெறவும் மற்றும் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு உட்படுவர், மேலும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 1992 மார்ச் 31 திகதிய கடிதத்தின் படி ஆணைக்குழு தனது | ஆணைக்குழுவின் ஆணையை விளைதிறனாக நிறைவேற்றுவதற்கு பொருத்தமான தகுதியான மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தக்கவைத்துக் கொள்ளப்படவேண்டும். எஸ்ஈசி சட்டத்தின் பிரிவு 43 கூறுவது, ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் உத்தியோகத்தர்களையும் மற்றும் பணியாளர்களையும் நியமிக்கலாம் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளத்தை அத்தகைய | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் படி அதன் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் மற்றும் ஊதியம் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் ஒப்புதலை பெறவும். |

ஊழியர்களை நியமிக்கவும் மற்றும் அவர்களது சம்பளங்கள், பிற ஊதியங்களை அரசாங்க விதிமுறைகளை கருத்தில் கொள்ளாமல் நிர்ணயிக்கவும் சலுகை பெற்றுள்ளது.

அதன் படி, ஊழியர்களின் சம்பள அளவு மற்றும் விசேட வாழ்க்கை படி, மாதாந்த படி, ஊழியர்களின் மருத்துவ செலவு, ஊழியர்களின் வாகன படி மற்றும் சிறப்பு கொடுப்பனவு போன்ற பிற ஊதியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் நேரத்திற்கு நேரம் தீரடமானிக்கப்பட்டது. இருப்பினும், 2018 செப்ரம்பர் 18 திகதிய பொது முயற்சிகள் குழுவின் (சிஓவிஈ) பரிந்துரையின் பிரகாரம் ஆணைக்குழு தனது ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஊதியங்கள் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் ஒப்புதலை பெற வேண்டும். ஆணைக்குழுவினால் 2019 ஒகஸ்ட் 22 வரையிலும் அத்தகைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 யூலை 18 திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல 03/2018, இன் பிரகாரம் தொடர்புடைய அதிகாரிகள் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதிலிருந்தும், அவர்களின் ஊழியர்களின் முறையில் மற்றும் அத்தகைய விகிதங்களில் பெறலாம்.

1992 மார்ச் இல் அப்போதைய நிதி அமைச்சின் செயலாளர் ஆணைக்குழு சிறப்பு பயிற்சி பெற்ற ஊழியர்களை நியமிப்பதற்கும் தக்க வைத்துக்கொள்வதற்கும் அரசாற்க விதிமுறைகளிற்கு உட்படாமல் ஆளணியை ஆட்சேர்ப்பு செய்யவும் சம்பளங்கள் மற்றும் ஊதியங்களை நியமிக்கவும் முடியும் என ஆணைக்குழுவிற்கு தெரிவித்தார்.

| | | | |
|---|---|---|---|
| | சம்பளங்கள் மற்றும் படிகளை அதிகரிப்பதிலிருந்தும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், பொது திறைசேரியின் முன் ஒப்புதல் பெறாமல் விலகியிருக்க வேண்டும். | | |
| ஆ) | 2017 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 96 ஆக இருந்ததுடன் மேற்கூறிய பதவியணிக்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. 2018 ஜனவரி 22 இல் நடைபெற்ற 404 வது ஆணைக்குழு கூட்டத்தில், 1992 மார்ச் 31 திகதிய திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட உத்தரவான “ஆணைக்குழுவே பதவியணியின் அமைப்பை தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த படி ஒப்புதல் பெறுவதை நிறுத்த வேண்டும் என்ற சான்றின் படி ஆணைக்குழு ஆளணியை நியமிக்க சுதந்திரமாக இருக்குமெனின்” ஆணைக்குழுவின் ஊதியக்குழுவின் தீர்மானங்களுக்கு ஆணைக்குழுவின் பதவியணி 96 இலிருந்து 137 ஆக அதிகரிக்கப்பட்டது.<br><br>இருப்பினும், மேற்கூறிய 2018 | 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கோரிக்கைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பதிவளிக்கவில்லை என்பதால், எஸ்ஈசி சட்டம் மற்றும் 1992 மார்ச் 31 ஆம் திகதிய திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட உத்தரவினை அடிப்படையாக கொண்டு பதவியணியின் திருத்தத்தினை ஆணைக்குழுவின் அங்கத்தவர் அனுமதியளித்திருந்தனர். | அதிகரிக்கப்பட்ட 41 பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதியை பெறவும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை 18 திகதிய இல 03/2018 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள படி அதிகரிக்கப்பட்ட 41 பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| இ) | 2017 திசெம்பர் 31 இல் சந்தை அபிவிருத்தி பணிப்பாளர், புலனாய்வுகள் பணிப்பாளர், மனித வளங்கள் பணிப்பாளர், மூலதன சந்தை கல்வி மற்றும் பயிற்சி பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் 2019 ஒகஸ்ட் 22 வரை வெற்றிடமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடமான பதவிகள் பல தடவைகள் விளம்பரப்படுத்தப்பட்டது. பொருத்தமான விண்ணப்பதாரர்கள் இனங்காணப்படவில்லை. | புலனாய்வுகள் பணிப்பாளர் போன்ற தேவையான பதவிகளை நிரப்ப முன்னுரிமை அளிக்கவும். |
| ஈ) | ஆணைக்குழுவில் இணைக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் 2016 ஏப்ரல் 19 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இருப்பினும், போக்குவரத்து படிகள் மற்றும் பிற நன்மைகள் தவிர்த்து அவரது மொத்த மாத சம்பளத்தில் அரைவாசிக்கு சமனான தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஸ்தாபன விதிக்கோவை உபபிரிவு 31.11 இற்கு முரணாக செலுத்தப்பட்டது. அவர் சார்பாக 2016 ஏப்ரல் 20 முதல் 2018 ஒகஸ்ட் 31 வரை ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட அரைமாத சம்பள செலவு ரூபா. 5, 212, 815 ஆகும். 2018 | அவருக்கு செலுத்தப்பட்ட அரைவாசி மீள்கொடுப்பனவு தொடர்பாக பின்தொடர நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மொத்த செலுத்தப்பட்ட சம்பளத்தினை மீளப்பெற தேவையான ஏற்பாடுகளை செய்யவும். |

செப்ரம்பர் 18 திகதிய பொது முயற்சிகள் குழு (சிஒபிஈ) கூட்டத்தின் பரிந்துரையின் பிரகாரம், ஆணைக்குழு சம்பளம் கொடுப்பதை நிறுத்துவதுடன் மொத்த செலுத்திய சம்பளத்தை மீளப்பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அதன்படி, 2018 செப்ரம்பர் முதல் அரைமாத சம்பள கொடுப்பனவு நிறுத்தப்பட்டதுடன் 2018 நவம்பர் 15 திகதிய கடிதத்தினால் மேற்குறிப்பிட்ட தொகையை மீள செலுத்துமாறு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 2019 ஒகஸ்ட் 22 வரை இது ஆணைக்குழுவினால் மீட்கப்படவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 பாதீட்டு மற்றும் உண்மையான செலவின விடயங்களிற்கு இடையில் 37 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க விலகல்கள் அவதானிக்கப்பட்டன. இதனால் முகாமைத்துவ கட்டுப்பாட்டிற்கான விளைதிறனான கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. | 15 விடயங்களில் 12 செலவின விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா. 9.4 பில்லியன் (பாதீடு) மற்றும் ரூபா. 4.1 பில்லியன் (உண்மை) தொகை ஆவதுடன் சதவீத விலகல்கள் பொருண்மையாக இருந்தாலும் அத்தகைய செலவினங்களின் அளவு மிக குறைவானதாகும். | முகாமைத்துவ கட்டுப்பாட்டின் விளைதிறனான கருவியாக பாதீட்டினை பயன்படுத்துவது அவசியமானது. |